# ஹிந்திக்கு கோவிந்தா!

## சென்னை கார்ப்பரேஷன் ஆசிரியர்கள் தீர்மானம்.

### இஷ்டபாடமாக்கவும் அனுமதியில்லை.

(ஒரு நிருபர்)

சென்னை, ஆகஸ்டு 30

சென்னை கார்ப்பரேஷன் பள்ளிக்கூட ஆசிரியர் சங்கத்தின் ஆதரவில் கூடிய மகாநாட்டில் பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதில் ஹிந்தி எதிர்ப்புத் தீர்மானம் மிகவும் முக்கியமானது.

கார்ப்பரேஷன் உயர்தர ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் ஹிந்தியை இஷ்டபாடமாக (கனம் ராஜகோபாலாச்சாரியார் விரும்புவது போல் கட்டாயபாடமாக வைப்பதல்ல) வைக்கவேண்டுமென்பது சம்பந்தமான தீர்மானத்தை அம் மகாநாடு விவாதித்தது.

ஆனால் மகாநாட்டில் கூடியிருந்தவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் தீர்மானத்தை ஆதரிக்காததினால் அது தோல்வியுற்றது

தீர்மானத்தை எதிர்த்தவர்கள் சிறுபிராயத்தில் மாணவர்களுக்கு ஹிந்தி பாஷையைக் கற்றுக்கொடுத்தால் தாய்மொழி வளர்ச்சி தடைபடுமெனவும் இங்கிலீஷ் பாஷையைக் கற்றுக் கொடுக்கும் வரையில் இன்னொரு பாஷையையும் அதிகமாகக் கற்றுக்கொடுப்பதென்பது மிகவும் கஷ்டமானதென்றும் கூறினார்.

பிள்ளைகள் பதினாறுவயது அடைந்தபிரகு ஹிந்தியைக் கற்றுக் கொடுக்கலாம் என்று அபிப்பிராயப்பட்டனர். ஹிந்தியைக் கட்டாயபாடமாக வைக்கவேண்டுமென்று கொண்டு வரப்பட்ட திருத்தமும் தோற்றது.